| | | | | | |
|---|---|---|---|---|---|
| MSSRF Science for Sustainable Development | **வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை**<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | |
| | மாவட்டம் : | **சிவகங்கை** | காலம் : | **03/07/2024** முதல் **07/07/2024** | |
| | அறிக்கை எண் : | **053/ 2024** | வெளியீட்டு நாள் : | **02/07/2024** | |

## சிவகங்கை மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 33°-40° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 25°-27° செல்சியஸ் ஆகவும் பதிவானது. மேலும் மழை பெறப்பட்டது.

| **கடந்தவார வானிலை (27.06.2024 முதல் 01.07.2024)** | | | | | | **அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு –07-07-2024- 08.30 வரை** | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 27/06 | 28/06 | 29/06 | 30/06 | 01/07 | தேதி | நாள்-1 03/07 | நாள்-2 04/07 | நாள்-3 05/07 | நாள்-4 06/07 | நாள்-5 07/07 |
| 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 3.3 | மழை (மி.மீ) | 0 | 3 | 0 | 2 | 0 |
| 35 | 33 | 39 | 40 | 39 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 37 | 36 | 35 | 35 | 34 |
| 27 | 25 | 27 | 26 | 27 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 26 | 25 | 25 | 24 | 24 |
| 7 | 3 | 3 | 5 | 6 | மேக மூட்டம் (ஆக்டா) | 7 | 8 | 7 | 8 | 8 |
| 83 | 65 | 68 | 63 | 82 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 70 | 70 | 70 | 70 | 70 |
| 56 | 44 | 44 | 65 | 50 | | 40 | 40 | 50 | 40 | 50 |
| 11 | 16 | 10 | 4 | 9 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 8 | 8 | 12 | 10 | 12 |
| வட மேற்கு | மேற்கு | மேற்கு | வட கிழக்கு | மேற்கு | காற்றின் திசை | தெற்கு | தென் மேற்கு | தென் மேற்கு | தெற்கு | தெற்கு |

## குறுஞ்செய்தி :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் ஜூலை 3 மற்றும் 6 தேதி லேசான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 34°-36° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 24°-26° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 8 முதல் 12 கி.மீ வேகத்தில், தெற்கு மற்றும் தென்மேற்கு திசைகளிலிருந்து காற்று வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

**அடுத்த வாரத்திற்கான விரிவாக்கபட்ட வரம்பு வானிலைமுன்னறிவிப்பு(05- 11 ஜூலை 2024):**

**மழைப்பொழிவு :**

05-07-2024 - 11-07-2024: நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் வாரத்தில் மாவட்டத்தில் இயல்பானது முதல் இயல்பை விட சற்று கூடுதலான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

**அதிகபட்ச வெப்பநிலை :**

இயல்பை ஒட்டியே காணப்படும். 26° செல்சியஸ் முதல் 32° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு

**குறைந்தபட்ச வெப்பநிலை :**

05-07-2024 - 11-07-2024: மாவட்டத்தில் குறைந்தபட்ச வெப்பநிலையை பொருத்தமட்டில் இயல்பை ஒட்டியே காணப்படும். 20° செல்சியஸ் முதல் 24° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**

**முக்கிய பயிர்கள் : வாழை, நிலக்கடலை, கால்நடை**

**வாழை:**

வாழையில் வேர் குடையும் நூற்புழு, வேர் அழுகல் நூற்புழு மற்றும் வேர் முடிச்சு நூற்புழுக்கள் தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. நூற்புழுக்களின் தாக்குதலால் மரங்கள் வளர்ச்சி குன்றியும், இலையின் ஓரங்களில் மஞ்சள் நிற கோடுகளும், இலைகள் வெளிர் மஞ்சள் நிறமாகியும் காணப்படும். வேர்களில் துரு நிறத்தில் கீறல்கள் மற்றும் சிவப்பு அல்லது கருமை நிற அழுகல்கள் காணப்படும்.

இதனை கட்டுப்படுத்த மரம் ஒன்றுக்கு மக்கிய தொழு உரம் மற்றும் வேப்பம் பிண்ணாக்கு முறையே 10 கிலோ மற்றும் 250 கிராம் இடவேண்டும்.

சணப்பு, கேந்தி போன்றவற்றை ஊடுபயிராகப் பயிரிட்டு பூக்கும் தருணத்தில் மடக்கி உழவு செய்ய வேண்டும்.

ஒரு எக்டருக்கு 2 லிட்டர் சூடோமோனாஸ் திரவத்தை நட்ட 2, 4 மற்றும் 6 வது மாதங்களில் சொட்டுநீர் பாசனத்தின் மூலம் கொடுக்க வேண்டும்.

**நிலக்கடலை:**

நிலக்கடலை பயிரில் காய்புழுவின் தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. இவ்வகை புழுக்கள் இலை, மொட்டு மற்றும் மலர்களை உண்டு சேதப்படுத்தும்

ஒரு எக்டேர்க்கு ஐந்து இனக் கவர்ச்சிப்பொறி வீதம் அமைத்து ஆண் அந்துப் பூச்சியைக் கவர்ந்து அழிக்கலாம். அல்லது ஒரு எக்டேர்க்கு 1 லட்சம் முட்டை ஒட்டுண்ணியான ட்ரைக்கோகிரம்மா கைலானிஸ் வீதம் நடவு செய்த 40 நாட்களுக்கு பிறகு வெளியிட்டு காய்த்துளைப்பானை கட்டுப்படுத்தலாம்.

அல்லது ஒரு ஏக்கருக்கு 160 மிலி (ஒரு லிட்டர் தண்ணீருக்கு 0.5மில்லி) இன்டோக்சாகேப் 14½சதம் அல்லது ஏக்கருக்கு 60 மில்லி (ஒரு லிட்டர் தண்ணீருக்கு 0.5மில்லி) ஸ்பினோசாடு 45சதம் இவற்றில் ஏதேனும் ஒரு மருந்தினை பூ மொட்டு விட துவங்கியதிலிருந்து 15 நாட்கள் இடைவெளியில் தெளித்து கட்டுப்படுத்தலாம்.

**கால்நடை:**

ஆடு வளர்க்கும் விவசாயிகளின் கவனத்திற்கு. ஆடுகளின் எடை அதிகரிக்கவும், ஆட்டுகுட்டிகளின் இறப்பை தவிர்க்கவும் குடற்புழு நீக்கம் செய்வது மிகவும் அவசியமாகும்,

பொதுவாக ஜீலை முதல் செப்டம்பர் மாதங்களில் தட்டைப் புழுக்களுக்கான குடற்புழு நீக்க மருந்துகளை கொடுக்க வேண்டும்,

அருகிலுள்ள கால்நடை மருத்துவரை அணுகி தங்களது ஆடுகளுக்கு குடற்புழு நீக்க மருந்தினை கொடுக்கவும்.